2022 ஏப்ரல் 27]

கேள்வி குறித்து ஏற்கெனவே கடிதம் கொடுத்திருக்கிறார். அது ஆய்வில் இருக்கிறது. எவ்வளவு விரைவாக அதனைச் செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக இந்த அரசு செய்து முடிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

185—

தொழிற்பூங்கா

***11987—திரு. கோ. செந்தில் குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதியை உள்ளடக்கிய திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், மல்லகுண்டா மற்றும் குருபவானிகுண்டா கிராமங்களில் தொழில் பயன்பாட்டிற்குத் தகுதியுள்ள அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளதா என்பதைக் கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி தகுதிகளுடன்கூடிய போதிய அரசுப் புறம்போக்கு நிலம் இப்பகுதியில் கண்டறியப்படும்பட்சத்தில் இங்கு சிப்காட் நிறுவனம்மூலம் ஒரு தொழிற்பூங்கா அமைப்பது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனது வாணியம்பாடி தொகுதி, புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்தின் மையப் பகுதியாகும்.*

[2022 ஏப்ரல் 27

சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட இந்த மாவட்டத்தில், சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் வாழ்கின்றார்கள். இந்தப் பகுதியில், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி தொகுதியில் தோல் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளாக தோல் தொழிற்சாலைகள் நல்ல நிலையில் இல்லை. எனவே, Leather Industry மற்றும் Leather சம்பந்தப்பட்ட தொழிற்பேட்டை அமைக்கப்பட வேண்டும். மல்லகுண்டா ஊராட்சியில் 2,500 ஏக்கருக்கும் மேற்பட்ட unreserved forest நிலங்கள் மற்றும் மேய்க்கால் புறம்போக்கில் 500 ஏக்கர் நிலம் உள்ளது. அதுவும் தேசிய நெடுஞ்சாலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: 3 கிலோ மீட்டருக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளதால் இங்கு ஒரு தொழிற்பூங்கா அமைத்துத்தர அரசு நிச்சயம் ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பொதுவாக காலணிகள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியா ஒரு மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் அதற்கு மிக முக்கியமான ஒரு குறிப்பிட்ட இடம் இருக்கிறது. எனவேதான், அருகில் இருக்கக்கூடிய ராணிப்பேட்டை மாவட்டத்தில் பணப்பாக்கத்தில் இதற்கென்று தனியாக ஒரு தொழிற்பூங்காவினை நாம் உருவாக்கயிருக்கிறோம். இப்போது 1,250 ஏக்கர் நிலப்பரப்பிலே பெரிய தொழிற்பூங்கா உருவாக்கப்படுகிறது. அதிலே 250 ஏக்கர் தனியாக தோல் பொருள்களுக்கென்று ஒதுக்கித்தர இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, அவருடைய தொகுதியிலேயே இப்போது, நான் சொல்லியிருக்கக்கூடிய இரண்டு இடங்களிலே நிலம் கண்டறியக்கூடிய பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

2022 ஏப்ரல் 27]

அந்த இடங்களிலும் நிலங்களைக் கையகப்படுத்தினோமென்றால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இத்தகைய தோல் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு, முன்னேற்றி கொண்டு வருவதற்கு வாய்ப்புகள் நிச்சயமாக உருவாகும் என்று நானும் நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டப்படி, அந்தப் பகுதியில் இயற்கையாக அமைந்திருக்கக்கூடிய தொழில் வளத்தை முன்னேற்றக்கூடிய வகையிலே, ஆவன வசதிகளை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள். கேள்வியைச் சுருக்கமாக கேளுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி மற்றும் ஆம்பூர் தொகுதியின் முக்கியத் தொழிலாக தோல் தொழில்தான் உள்ளது. இந்தத் தோல் தொழிலுக்கு முக்கிய ஆதாரமாக உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கிட்டத்தட்ட ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் அளவிற்கு செலவினம் ஏற்படுகிறது. கடந்த காலங்களில் கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கு முன்புவரைக்கும் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, மேல்விஷாரம், ராணிப்பேட்டையிலிருந்து இந்தியாவிலேயே 37 சதவிகிதம் வேலூர் மாவட்டத்திலிருந்துதான் தோல் தொழிற்சாலைகளில் பதப்படுத்தப்படும் தோல் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. இப்போது, நான்கு வருடங்களாக, இதற்கான செலவினம் அதிகமானதால் சிறு தொழிற்சாலைகளெல்லாம் மூடப்படும் நிலையிலும், பெரிய தொழிலதிபர்கள்கூட தொழிலை விட்டுச் செல்லும் நிலையில் இருப்பதால், சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் செலவினத்தை மானியம் மூலமாக அரசு ஏற்கும்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

திரு. கோ. செந்தில் குமார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தோல் தொழில் முக்கியமான தொழிலாகும். தமிழ்நாட்டில் ஏற்றுமதி மற்றும் பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்ற ஒரு தொழிலாகும். ஆனால், effluent treatment plant அமைப்பது என்று வருகின்றபோது, உள்ளபடியே சுற்றுச்சூழலில் சில பிரச்சினைகள் இருக்கக்கூடிய காரணத்தினால், இந்தத் தொழிலில், பொதுவான அளவில் சில பாதிப்புகள் வருகின்றன. காலணி உற்பத்தியில் தற்போது synthetic footwear, அதாவது தோல் அல்லாத மாற்றுப் பொருள் காலணிகளுக்கு நல்ல market இருக்கிறது. அதிகளவிலான தொழிற்சாலைகள், தங்கள் கவனத்தை அதை நோக்கி செலுத்தி வருகின்றன. இருந்தாலும், பாரம்பரியமான முறையில் அந்த இடத்தில் இருக்கின்ற தொழில்களைக் காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பும், கடமையும் அரசிற்கு இருக்கிறது என்பதை நானும் உணர்கிறேன். எனவே, அவர் சொல்லியிருக்கிற பிரச்சினைகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசி, தொழில் தொடர்ந்து நடப்பதற்கான நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் ஏற்கெனவே அதிகளவில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கு காலியிடங்களும் இருக்கின்றன. ஆனால், ராஜபதி, வெங்கடாஜலபுரம் போன்ற கிராமங்களில் இப்போது நில எடுப்புப் பணிகளை தொடங்கியிருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நேரிலே சொல்லியிருக்கிறேன். தங்களிடமும் நான் நேரிலே இதுகுறித்து சொல்லியிருக்கிறேன். அந்த இடம் ஆடு, மாடுகள் மேய்ச்சல் புறம்போக்கு நிலமாக இருக்கக்கூடிய பகுதியாகும். அந்த நிலங்களைக் கையகப்படுத்தினால் இரண்டு ஊர்களில் உள்ள மக்கள் எல்லோரும் அந்த ஊரைக் காலி செய்துவிட்டு, வேறு ஊருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இந்த இடத்தில் உள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதை விட்டுவிட்டு, பக்கத்தில் இருக்கிற இடங்களைக் கையகப்படுத்தினால் நன்றாக

2022 ஏப்ரல் 27]

இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இதுகுறித்து அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்திருப்பதால் இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முடிவினை அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் எப்போதும் தங்கம்தான். எனவே, அவர் நல்ல முடிவைத்தான் அறிவிப்பார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில், நெல்லைக்கு அருகில் உள்ள கங்கைகொண்டான் தொழிற்பூங்கா என்பது முக்கிய கேந்திரமான இடத்தில் அமைந்துள்ளது. சில பகுதிகளில் உள்ள தொழிற்பூங்காவில் சில இடங்கள் காலியாக இருக்கும். ஆனால், கங்கைகொண்டான் தொழிற்பூங்காவில் மட்டும் 90 சதவிகிதத்திற்கும் மேலான தொழில்முனைவோர்கள் எல்லாம் ஏற்கெனவே நிலத்தை எடுத்துக் கொண்டு, பணியை நிறைவு செய்துள்ளார்கள். 10 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இப்போது இடங்கள் காலியாக உள்ளன. புதிதாக தென் மாவட்டங்களை நோக்கி வரக்கூடிய தொழில்முனைவோர்கள், தொழில் முதலீட்டாளர்கள் கங்கைகொண்டான் பகுதியில் தங்களுக்கு நிலம் தேவை என்று சொல்கிறார்கள். ஆகவேதான், இப்போது* Phase II*–க்காக கங்கைகொண்டானில் நிலம் கையகப்படுத்தும் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதிலும், குறிப்பாக ராஜபதி போன்ற கிராமங்களில் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை எடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தெரிவித்திருக்கிறார். ஏற்கெனவே, ஊர் மக்கள் சார்பாகவும், உங்கள் முன்னெடுப்பின் காரணமாகவும், நீங்களும் என்னிடத்தில் வலியுறுத்தியிருக்கின்றீர்கள். எங்களைப் பொறுத்தமட்டிலே, விவசாயம் செய்யக்கூடியவர்களை பாதித்து, அவர்களுடைய நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்பது எங்கள் நோக்கம் இல்லை. அது அரசாங்கத்தினுடைய மேய்ச்சல் புறம்போக்கு நிலமாக இருக்கிறது. இருந்தாலும், இந்த இடத்தை நீக்கி விட்டு பார்த்தோம் என்று சொன்னால்—*Contiguous tract of land *என்று சொல்வார்கள்;* Land parcel *தொடர்ச்சியாக வர வேண்டும். ஒரு பகுதியில் நிலம் எடுத்துவிட்டு, இடையிலுள்ள*

பகுதியை விட்டுவிட்டு, இன்னொரு பகுதியில் நாம் போய் நிலத்தை எடுத்தோம் என்றால், நடுவில் இருக்கக்கூடிய land continuous ஆக இருக்காது, contiguity இருக்காது. எனவேதான், அதுகுறித்து யோசித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியைத் தவிர்த்து, மற்ற பகுதிகளில் தொடர்ச்சியான நிலம் அரசிற்குக் கிடைக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதியை விட்டுவிட்டு, மற்ற பகுதிகளில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை துறை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தொழிற்பூங்காக்களில் நில ஒதுக்கீடு ஆணையைப் பெற்றவர்கள், ஒரு குறிப்பிட்ட காலக்கெடு வரை தொழில் தொடங்காமல் இருப்பதையும், நில ஒதுக்கீடு பெற்று தொழில் தொடங்கி நலிவடைந்திருக்கின்ற நிலையையும் கண்டறிந்து, காத்திருக்கக்கூடிய புதிய தொழில்முனைவோர்களுக்கு நல்ல வாய்ப்பை வழங்கி, பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய வகையில், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விரைந்து புதியவர்களுக்கு நிலம் வழங்குவதற்கு, அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அன்பிற்குரிய சகோதரர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள் எழுப்பிய கேள்வி, நல்ல கேள்வி. அதிகம் பேர் வந்து எங்களுக்கு நிலம் வேண்டும் என்று கேட்டு, சிப்காட்டில் land allotment வாங்கிவிடுகிறார்கள். வாங்கிய பிறகு, நீண்ட காலமாக தொழில் தொடங்காத நிலை இருக்கிறது. எனவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 'எத்தனை நாட்களுக்கு முன்பு நிலத்தை வாங்கியிருக்கிறீர்கள்' என்று கேட்டு, இப்போது எல்லோருக்கும்

2022 ஏப்ரல் 27]

notice அனுப்பியிருக்கிறோம். நீங்கள் பயன்படுத்தாமல் இத்தனை வருடங்களாக வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அந்த இடங்களை ஒப்படைத்துவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆனால், இதில் என்ன பிரச்சினை என்றால், இந்த இரண்டு வருடங்களாக COVID நோய்த் தொற்று இருந்ததன் காரணமாக, பல இடங்களில் இடத்தைப் பெற்றிருக்கக்கூடியவர்கள் 'COVID முடக்கக்காலத்தில் தொழில் துவங்குவதற்கான முயற்சிகளை எங்களால் தொடங்க முடியவில்லை. எங்களுக்கு இருக்கக்கூடிய பொருளாதார சூழ்நிலை, மற்ற சூழ்நிலை, மற்ற நிலைமைகளைக் கருத்தில்கொண்டு எங்களுக்கு நீங்கள் ஒரு Extension கொடுக்க வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள். தொழில்முனைவோர்கள் சொல்வதில் ஒரு நியாயமான காரணம் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம். அப்படி நியாயமான காரணங்கள் இருக்கக்கூடிய இடங்களாக இருந்தால், அதனை அரசு கனிவோடு கவனிக்கும். அப்படியில்லாமல், அதற்கு முன்பே நிலத்தை வாங்கிக்கொண்டு, எந்தவித தொழிலும் நடத்தாமல் அப்படியே வைத்திருந்தார்கள் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அவற்றைக் கையகப்படுத்தலாம். உங்களுடைய கேள்வியை வைத்தே நாங்கள் அதற்கான பணிகளைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

186—

சிட்கோ தொழிற்பேட்டை

***7577—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?